1975 ஏப்ரல் 8]

மீதியிருக்கின்ற பணத்தை மற்றக் கோயில்களுக்கு நிதி மாற்றம் செய்வதாக இருந்தாலும் அல்லது சமுதாயத் துறையிலே தேவையான காரியங்களைச் செய்வதாக இருந்தாலும் ஏற்கெனவே அவையிலே வைக்கப்பட்டிருக்கிற குறிப்பினுடைய விதிகளின் அடிப்படையில் அந்த நிதியை மாற்றம்-செய்து செயல்பட்டு வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த நிதி இந்த நிதியிலிருந்து கொடுக்கப்படுமா ? அல்லது அதற்கென்று தனியாக நிதி திரட்டப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பொறுத்தவரையில் கோயில் ஊழியர்களுக்கு எந்த வகையில் செயல்படுத்தலாம் என்பதைப் பற்றி தற்பொழுது அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், ஏற்கனவே அரசாங்க ஊழியர்களுக்கு இருப்பதைப் போல் கோயில் ஊழியர்களுக்கும் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற முடிவு வரவு-செலவுத் திட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தெந்த வகையில் நிதி சேர்ப்பது, எந்தெந்த வகையிலே ஊழியர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்குவது என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து, வருகின்ற ஜூன் மாதம் 3-ம் தேதியிலிருந்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது.

அறநிலையத்துறையின் கீழுள்ள ஆலயங்கள்

*598 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ் நாட்டிலுள்ள இந்து அறநிலைய ஆட்சித்துறையினரின் பொறுப்பிலுள்ள எந்தெந்த ஆலயங்களின் ஆண்டு வருமானம் இருபத்தைந்து லட்சமும் அதைத் தாண்டியும் உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(1) அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர்.

(3) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை.

(4) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறநிலையத்துறைக்குக் கட்டுப்படாமல், அதே நேரத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வருமானமுடைய கோயில்களாக தர்மபுரம் ஆதினத்திற்குக் கட்டுப்பட்ட 27 கோயில்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றன. எனவே, அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர முடியாததற்கான சங்கடங்கள் என்னவென்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, அப்படிப்பட்ட 27 கோயில்கள் மட்டுமல்ல, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இன்னும் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களை இந்தத் துறையினுடைய பொறுப்பிலே நாம்கொண்டு வர வேண்டும். அது மட்டுமல்லாமல், மத சம்மந்தமான கட்டளைகள் அன்ன தானம் செய்வது அல்லது வேத பாடசாலைகள் நடத்துவது, இப்படிப்பட்ட கட்டளைகள் கூட ஏராளமாக தனியார் பொறுப்பிலே இருக்கின்றன. ஏற்கனவே பிற மாநிலங்களில், ஆந்திரா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட அறக்கட்டளைகள் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட வேண்டுமென்று ஏற்கனவே சட்டம் போட்டு செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலத்திலே இருக்கிற மத சம்பந்தமான கட்டளைகள் அத்தனையையும் இலாகாவினுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று அரசாங்கத்திலே ஆலோசனை செய்து கொண்டு வருகிறோம்.

இந்தக் கோயில்களைப் பொறுத்தவரையில், எல்லாக் கோயில்களையும் நம்முடைய துறையின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டு மென்ற திட்டத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டு 21,000 கோயில்களை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம்.

சூணம்பேடு கிராமத்தில் சமுதாயக் கூடம்

* 599 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள சூணம்பேடு அரிசன குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : மதுராந்தகம் தாலுக்காவி லுள்ள சூணம்பேடு அரிசனக் குடியிருப்புப் பகுதியில் 1974–75-ம் ஆண் டில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித் துள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, 1973–74–லேயே இந்தச் சமுதாயக் கூடம் அமைப்பதாக இருந்தது. 1974–75–லே தீர்மானிக்கப் பட்டது. அது விரைவிலே முடிவடையும் என்கின்ற உத்தர வாதத்தை அரசு அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி அன்று அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதை யார் செய்வது என்ற முறையில் விவாதம் வந்தபொழுது, 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி அன்று நம்முடைய தமிழ் நாட்டு வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமே அந்தக் கட்டிட வேலையை முடிக்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டுள்ளது.